## தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்


**கேள்வி:-**

(அ) இந்திய தேர்தல் ஆணையமானது, யூனியன் மற்றும் மாநிலங்களில், வரவிருக்கின்ற தேர்தல்களில், (FRT) எனப்படும், முகங்களை அடையாளம் காணும் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வாய்ப்புள்ளதா?

(ஆ) கடந்த காலத்தில், இந்திய தேர்தல் ஆணையம், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களில் நடந்த தேர்தல்களில், FRT எனப்படும், முகங்களை கண்டறியும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

(இ) இந்திய தேர்தல் ஆணையம், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி,FRT எனப்படும் முகங்களைக் கண்டறியும் தொழில்.நுட்பத்தை, தேர்தல் செயல்பாட்டில் பயன்படுத்துவதற்கு சட்டப்படி அதிகாரம் உள்ளதா?

(ஈ) அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையெனில், FRT எனப்படும், முகங்களைக் கண்டறியும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான காரணங்கள் என்ன?

(இ) தேர்தல் செயல்பாடுகளில், FRT எனப்படும், முகங்களைக் கண்டறியும் தொழில்நுட்பத்தை தொடங்குவதற்கு முன், குடிமக்களின், தரவுகளின் பாதுகாப்பு தொடர்பாக தனியுரிமை மதிப்பீட்டை இந்திய தேர்தல் ஆணையம் நடத்தியதா? மற்றும் இல்லையென்றால், அதன் விவரங்கள் என்ன?

**<u>பதில்:-</u>**

ஒன்றிய, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தின் இணையமைச்சர் (சுதந்திர பொறுப்பு); பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் இணையமைச்சர் மற்றும் கலாச்சாரத் துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெக்வால்

(அ): இல்லை சார்.

(ஆ): மேலே உள்ள (அ)க்கான பதிலைக் கருத்தில் கொண்டு, இந்திய தேர்தல் ஆணையம் தொடர்பாக இந்த கேள்வி எழவில்லை. மாநில தேர்தல் ஆணையங்களைப் பொறுத்த வரையில், அவை அடிப்படையாக, இந்திய அரசாங்கத்திற்கு பொறுப்பல்ல.

(இ)லிருந்து (உ)வரை: மேலே உள்ள (அ)க்கான பதிலின் அடிப்படையில், இதற்கான பதில் தேவையில்லை.

******